# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,080 — 1934 ம் ஹு புரட்டாதிமீ 21 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

### 1909 ம் ஆண்டின் மிருகத் தொற்றுநோய்ச் சட்டம்.

1934 ம் ஹு நொவெம்பர்மீ 1 ந் தேதி தொடக்கமாகவும் அத்தேதியின் பின்னும் ஒருமாச காலவெல்லைக்குள் இறக்குமதி செய்யலாம் என்று உத்தரவு கொடுக்கப்பட்ட செம்மறியாடுகள் வெள்ளாடுகளின் தொகை 3,000 ஆகவிருத்தல் வேண்டுமென்று, 1909 ம் ஆண்டின மிருகத் தொற்றுநோய்ச் சட்டத்தின் 9 (19) ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்டு 1932 ம் ஹு ஜூன்மீ 10 ந் தேதியைக்கொண்ட கவண்மேந்துக் "கசெற்" பத்திரிகையில் வெளிவந்த ஒழுக்கவிதிகளின் 6 ம் பிரிவின் பிரகாரம் இதனால் விளம்பரம் பண்ணப்படுகின்றது.

இந்தத் தொகையை மறுபடி பார்த்து மாற்றுவது அவசியமென்று காணப்படுமாகில், இத்தேதியிலிருந்து 6 மாச காலத்தில் அது அவ்விதம் மறுபடிபார்த்து மாற்றப்படும்.

1933 ம் ஹு ஆகஸ்ட்மீ 11 ந் தேதியைக்கொண்ட 7,997 ம் இலக்கக் "கசெற்" பத்திரிகையில் வெளிவந்த, 1933 ம் ஹு ஆகஸ்ட்டுமீ 1 ந் தேதியைக்கொண்ட விளம்பரத்தின் (1) ம் வாக்கியத் தொகுதி இதனால் அழித்துவிடப்படுகின்றது

கிருஷித்தொழிற் காரியங்களதும் காணி விஷயங்களதும் பொறுப்பேற்றிருக்கும் அதிகாராங்கம்
கொழும்பு, 1934 ம் ஹு செப்றெம்பர்மீ 18 ந் தேதி.

டீ. எஸ். சேனநாயக்க,
கிருஷித்தொழிற், காரியங்களுக்கும் காணிவிஷயங்களுக்கும் மேலதிகாரமந்திரி.

---

### காணிக் குத்தகை விற்பனை அறிவித்தல்.

1934 ம் ஆண்டு ஆடி மாசம் 6 ந் திகதியின் 8,062 ம் இலக்க அரசாட்சி "கெசெற" பத்திரிகை நான்காம் பாகத்தில் 192 ம் பக்கத்தில் அறிவித்தல் கொடுத்தபடி மகாஓயா வாடிவீட்டில் 1934 ம் ஆண்டு ஆவணி மாசம் 20 ந் திகதி, திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடத்தவிருந்து, 1934 ம் ஆண்டு ஆவணி மாசம் 10 ந் திகதியின் 8,072 ம் இலக்க அரசாட்சி "கெசற்" பத்திரிகை நான்காம் பாகத்தில் 275 ம் பக்கத்தில் அறிவித்தல் கொடுத்தபடி, 1934 ம் ஆண்டு புரட்டாதி மாசம் 24 ந் திகதி திங்கட்கிழமைக்குத் தவணை போடப்பட்ட காணிக்குத்தகை விற்பனவு அத்திகதியில் நடைபெறுது என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1934 ம் ஆண்டு புரட்டாதிமீ 15 ஃ.

சி. வி. பிறேயின்,
காணிக்கொம்மிஷனர்.

---

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் செவிடர் குருடர் பள்ளிக்கூடத்துக்கும் கண்டாவள எஸ்ரேற்றுக்கும் காந்தவெளிச்ச டேசனுக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A. 401. குறிச்சி—றத்மலான தெற்கு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கண்டாவளஎஸ்றேற் | கறுவாத் தோட்டத்தின் பகுதி, 21 கறுவாப்பத்தையும், 2 கசு மரமும், 1 கொறக்காமரமும், 1 இரும்புச் சோதனைப்பெட்டியும் 2 இரும்பு காந்த ஸ்ரான்டேட்ஸ்சுமுள்ளது | என். டி. ஏச். அப்துல் கவூர், காலிறோட்டு, தொன்லப்பிட்டி | 0 0 21·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஞூ (ஒக்டோபர்) ஐப்பசி மாசம் 30 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்பு கச்சேரி, — கார்ள். ஈ. ஆண்ட்,
1934 ம் ஞூ (செப்ரெம்பர்) புரட்டாதிமீ 14 ந உ. — உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கட்டுக்குருந்தையில் ஓர் பகிரங்கக் கக்கூசிற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 398. குறிச்சி—கட்டுக்குருந்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பகுதி இலக்கம் 1, கொழும்புத் தெரு சோலைவரி இலக்கம் 519ன் பகுதி, கட்டுக்குருந்து தோடன்காகவத்தை | 20–30 வரையில் வயதுள்ள 3 தென்னைமரங்கள் அடங்கிய தோட்டம் | களுத்துறை தெற்கைச்சார்ந்த மாப்பிள்ளை மரைக்கார் முகம்மது இஸ்மேயில் | 0 0 10 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஞூ ஐப்பசி மாசம் 13 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு களுத்துறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிபட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி, — ஜே. ஹேட்,
1934 ம் ஞூ புரட்டாதிமீ 15 ந உ. — உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கந்தானைப்பிற்றியா சுயபாஷைக்கலவன் பாடசாலைத் தோட்டத்தை விசாலிப்பதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 393. குறிச்சி—கந்தானைப்பிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | காகாற்றசாகவத்தை .. | ஏறக்குறைய 5–15 வரையில் வயதுள்ள 6 தென்னைமரங்கள், சொற்பகாலத்துக்குரிய ஒரு மலசலகூடம், சொற்பகாலத்துக்குரிய பள்ளிக்கூடக் கட்டடத்தின் பகுதி, பள்ளிக்கூடத்தைக் கிட்டிச்சேருந்தெரு முதலியன அடங்கிய தென்னந்தோட்டம் | கந்தானைப்பிற்றியா வைச்சார்ந்த ஆர். தோமாஸ் | 0 1 36·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஞூ ஐப்பசி மாசம் 16 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு இங்கிரியாக் கிராம நீதிஸ்தலத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும்அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி, — ஜே. ஹேட்,
1934 ம் ஞூ புரட்டாதிமீ 15 ந உ. — உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

இத்தால் சகலருமறியவேண்டியது, இரத்தினபுரியைச் சேர்ந்த குருவிட்டி கோறளை மன்வளையில் வசிக்கும் குட்டிகந்தே விதானலாகே புஞ்சிமகத்துமயா ஆகிய நான் 1907 ம் ஆண்டின் கட்டளைச்சட்டத்தின் 1 ம் பிரிவின் 1 B ஆகிய பிரமாணப்படி இன்னும் 3 மாசத்தின்பின் இரத்தினபுரி பகுதியில் (சிங்களத்தில்) ஓர் பிரசித்த நொத்தாரிஸ் ஆகக் கடமைபார்க்கவும் பதியப்படவும், அரசினர் பதிவு கந்தோர்த் தலைவர்க்கு விண்ணப்ப மனுப்பி இருக்கின்றேன் என்பதை அறியத்தருகிறேன்.

கே. வீ. புஞ்சிமகாத்மயா,

மன்வளை, 1934 ம் ஆண்டு புரட்டாதிமீ 1 ந உ.

இத்தால் சகலருமறிக காலி டீஸ்திறிக்கிலுள்ள வெல்லப்படபத்துவிலுள்ள பலப்பிட்டிவாசியாகிய தடிமுனிவில் பார்ட். டீ. சில்வாவாகிய நான் 1907 ம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் 1 B யாகிய ஜாபிதாயின்படி இன்னும் 3 மாசத்தின்பின் கண்டிப்பகுதியில் சிங்களப் பாஷைக்கு ஓர் பிரசித்த நொத்தாரிஸ்ஆகக் கடமைபார்க்கவும், பதியப்படவும் அரசினர் பதிவுக்கந்தோர் தலைவருக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறேன் என்பதை அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,

டீ. டபிள்யு. டீ. சில்வா,

பலப்பிட்டியா,
1934 ம் ஞூ புரட்டாதிமீ 4 ந உ.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.